புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திருப்பத்தூர் வட்டார சிறுதெய்வ வழிபாடும் பண்டைய மரபும்

முனைவர் ஆ. பிரபு
உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)

மானுட வரலாற்றில் நாடோடி வாழ்வினை அடுத்த வேளாண்மைச் சமூகமாக மக்கள் நிலைத்து வாழத் தொடங்கியபோது நிலமானது பெண்ணாகக் கருதப்பட்டு வந்துள்ளது. அதற்குச் சான்றுகளாக பூமித்தாய், நிலமகள், பூமாதேவி, தாய்மண் போன்ற புழங்குச் சொற்களைக் கூறலாம். இதன் வெளிப்பாடாகத் தாய்த் தெய்வமானது செழிப்போடு தொடர்புபடுத்தப்பட்டது. தமிழகத்தைப் பொருத்தமட்டில் வைதீக சமய எழுச்சிக்கு முன்பு அதாவது ஆதிப்பொதுவுடைமைச் சமூகத்தில் இருந்தே பெண்களும் பெண் சார்ந்த தொன்மங்களும் உயர்ந்த இடத்தில் வைக்கப்பட்டு வந்துள்ளன. இக்கட்டுரையில் திருப்பத்தூர் மாவட்டத்தில் காணலாகும் சிறுதெய்வ வழிபாடுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் களத்தில் மேற்கொண்ட ஆய்வுகளின் வழிநின்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

புதைந்து போன, மறக்கப்பட்ட நன்மரபுகளை மீட்பது என்பது சமூக மறுமலர்ச்சிக்கும் படிப்பினைக்கும் வழிவகுக்கும். திருப்பத்தூர் வட்டாரத்தில் காணலாகும் சிறுதெய்வங்களில் பெண்தெய்வங்களையும் அது தொடர்பான பண்பாட்டு அடையாளங்களையும் வழக்கங்களையும் அறிந்துகொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிச்சொற்கள்
சிறுதெய்வம் – வழக்காறுகள் – பண்பாடுகள் – மரபுகள் – எச்சங்கள் – திருப்பத்தூர் மாவட்ட சிறுதெய்வங்கள் – கள ஆய்வு

## தாய்த்தெய்வ மரபு

போலச் செய்யும் மந்திரம் (*Imitative Magic*) இந்திய அளவிலும் உலக அளவிலும் பெரும்பாலும் முன்னோர் கற்றுத்தந்த வழக்களை மையமிட்டு நிகழ்த்தக்கூடியதாகும். மழைச் சடங்குகள் குறித்து ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான சடக்குகள் நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். முளைப்பாரி, பலியிடல் போன்றவற்றில் இடம்பெற்றுள்ள தாய்த்தெய்வ வழிபாட்டுக் கூறுகள் இடம்பெறுவதை நாம் அறியமுடிகிறது. இவையாவும் குழந்தைகளைப் பாதுகாத்தல், ஊர்ப் பாதுகாப்பு, காலநடைப் பாதுகாப்பு, நோய்களில் இருந்து பாதுகாத்தல், போரில் துணையாக நிற்றல், மலைகள், குன்றுகள், ஏரிகள், ஆறுகள் இவற்றில் வாழுதல், குருதி வேட்கை கொண்டிருத்தல் என்ற குண இயல்புகளைக் கொண்டவை யாவும் தாய்த்தெய்வ வழிபாட்டின் பயனாகக் குறிப்பிடப்படுகின்றன. “சிறுதெய்வங்கள் என சுட்டப்படுவனவற்றின் அடிப்படையான அடையாளங்கள் அவற்றைப் பிராமணர் பூசிப்பதில்லை என்பதும், அவை இரத்தப் பலி பெறுவன என்பதும் தாம். ‘பலி’ என்பது வடமொழிச் சொல். படைக்கப்படுதல் என்பது அதன் பொருள். தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான சிறுதெய்வங்கள் உள்ளன. சிறு தெய்வக் கோயில்கள் இல்லாத கிராமமே இல்லை எனலாம். இவற்றில் செம்பாதிக்கும் மேல் தாய்த்தெய்வங்கள்”[1]

பல்வேறு பழங்குடிகளது தாய்த்தெய்வங்களின் பெயர்கள் எப்படி மலைகளுடனும் குன்றுகளுடனும் தொடர்புடையனவாய் இருப்பதையும்; அவற்றில் சில தெய்வங்கள் வைதீக சமயத் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டமை குறித்தும் நாம் அறியமுடிகிறது. தமிழரின் தொன்மை வழிபாடான இயற்கை சார்ந்த வழிபாடுகளில் பெண் தெய்வ வழிபாடும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தது. நிலத்தைப் பூமிதேவியாகவும், மழையை மாரியாகவும், நதிகளை நீராமகளிராகவும் போற்றும் பண்பாடு பண்டுதொட்டுத் தமிழர் மத்தியில் இருந்துவருகின்றது. அவ்வகையில் கொற்றவை வழிபாடு தாய்வழிச்சமூக மரபினை உணர்த்தும் வளமையின் குறியீட்டு நிகழ்வாகும். தலைப்பலி, நவகண்டம் என மேற்சுட்டிய உயிர்ப்பலிகள் யாவும் கொற்றவைக்கே கொடுக்கப்பட்டன. இப்பலிகளை மானிடவியல் பார்வையில் வளமைக்கான சடங்குகளின் எச்சமாகவே அணுகவேண்டியுள்ளது. தவ்வை என்றும் மாமுகடி என்றும் வள்ளுவரால் சுட்டப்பட்டு; கொற்றவை, பழையோள், காடுகிழாள், கானமா செல்வி என்று தமிழ் இலக்கியங்கள் ஏற்றிப் போற்றும் மிகப் பழைமையான பெண்தெய்வமாக கொற்றவை இருந்துள்ளதை அறியமுடிகிறது. வளமைத்தாய் எனப் பழந்தமிழராலும்; ஏகவேணி, அலட்சுமி, ஜேஸ்டா தேவி எனப் பல்லவர்களாலும் இப்பெண் தெய்வம் அடையாளப்படுத்தப்பட்டாள். தமிழர்கள் மூத்த தேவி (மூதேவி) என அழைத்து வழிபட்ட இவள், பல்லவர்களின் குல தெய்வமாகிய பின்னர் கருவறைத் தெய்வமாக மாற்றப்பட்டாள்.

பெருத்த வயிறும், பருத்துச்சரிந்து காணப்படும் மார்பகங்களும் இவ்வகைச் சிற்பத்தின் பொது இயல்பாகும். இவை, பிறப்பு உயிர்களை படைத்தல் ஆகியவற்றை உணர்த்தும் குறியீடுகளாகும். இந்த அடையாளங்கள் இவள் வளமைத்தெய்வம் (கொற்றவை) என்பதை உறுதிப்படுத்தும். இச்சிற்பத்தில் கொற்றவைக்கு வலப்புறம் காக்கையும் இடப்புறம் கழுதையும் இடம்பெற்றிருக்கும். கோரமான முகத்தோற்றமும் இடது கையில் துடைப்பமும், வலக்கரத்தில் அபய முத்திரையுடனும், கீழே வலப்புறம் ஒரு ஆண் உருவமும், இடப்புறம் பெண் உருவம் இடம்பெறும். அவர்கள் மூத்ததேவியின் மக்களான மாந்தனும், மாந்தியும் என நம்பப்படுகின்றது. தமிழகத்தின் பல இடங்களில், குறிப்பாக வட மாவட்டங்களில் பழமையான கொற்றவை சிற்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

பெருங்கற்கால நினைவுச்சின்னங்களுள் ஒன்றான விசிறிக்கல் என்பது தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடக்ககால முயற்சியாகத்தான் இருந்திருக்க வேண்டும். இவற்றை தொல்லியலாளர்கள் மனித வடிவக்கல் (Anthromorpuic Menhir) என்று அழைக்கின்றனர். இவை தமிழகத்தில் விழுப்புரம் மாவட்டம் உதயநத்தம் மற்றும் வேலூர் மாவட்டம் மோட்டூர் ஆகிய இரண்டு இடங்களில் கிடைத்துள்ளன. இவை ஆதிப் பொதுவுடைமைச் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட தாய்த்தெய்வமாகும். திருப்பத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், பொன்னியம்மன், செல்லியம்மன், தீப்பாய்ஞ்சியம்மன், பாப்பாத்தியம்மன், மாரியம்மன், வேடியப்பன், கருப்பசாமி, பெரியசாமி, ஊர்காத்தான், பூங்காவனத்தம்மன், குண்டிமாரி, நொண்டிமாரி போன்ற பல சிறு தெய்வங்கள் வழிபடப்பட்டு வருகின்றன.

இச்சிறுதெய்வ வழிபாட்டில் பெரும்பாலும் சதிக்கற்களும், நடுகற்களும் பல்வேறு புனையப்பட்ட பெயர்களுடன் மக்கள் வழிபாட்டில் உள்ளன. இவற்றில் உயிர்ப்பலியிட்டு அசைவப் படையலுடன் வழிபடும் மரபு பல இடங்களிலும்; உயிர்ப்பலி செலுத்தப்பட்டு படையல் இடாமல் வழிபடும் வழக்கமும் சில இடங்களில் காணப்படுகின்றன. “சிறு தெய்வ கோயில்கள், குறிப்பாகப் பெண் தெய்வங்கள் கோயில்கள் பெரும்பாலும் வடக்கு நோக்கியே அமைந்திருக்கின்றன. ஆண் தெய்வங்களின் கோயில்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கி அமைந்திருக்கின்றன. சிறுதெய்வங்கள் பெரும்பாலும் சினம் கொண்ட நிலையில் தான் அமைந்திருக்கின்றன. எனவே அவற்றை அமைதிப்படுத்த இரத்தப் பலி தருவது மரபாக இருந்து வருகிறது”[2] கள ஆய்வில் கண்ட தகவல்களின் அடிப்படையில் பெரும்பாலும் இம்மாவட்டத்தில் உள்ள தொன்மையான சிறு தெய்வ வழிபாட்டிடங்கள் யாவும் வடக்கு நோக்கியே அமைந்துள்ளன. ஒவ்வொரு வழிபாட்டு இடங்களிலும் பழமையான மரம் ஒன்றும் வழிபாட்டில் இடம்பெறுவதும் கவனத்திற்குரியதாகும்.

தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சிறுதெய்வ வழிபாடுகள் தொன்றுதொட்டு இருந்துவருகின்றன. அவையாவும் அந்தந்தப் பகுதிகளின் வரலாற்றுப் பின்புலத்தினையும், முன்னோர் வழக்காறுகளையும் தாங்கிப் பல தலைமுறைகள் கடந்தும் நிலைபெற்று வருபவையாகும். அவ்வகையில் திருப்பத்தூர் மாவட்டத்தின் பல இடங்களிலும் நடுகல்

வழிபாடு, மர வழிபாடு, முன்னோர் வழிபாடுகளின் ஊடாக சிறுதெய்வங்களாக உருப்பெற்று இன்றுவரை வழிபாட்டின் நிலைபெற்றுதனை கள ஆய்வுகளின் வாயிலாக அறியமுடிகின்றது.

சான்றெண் விளக்கம்

1. பரமசிவன்.தொ. பண்பாட்டு அசைவுகள் ப – 32
2. மேலது, ப – 32

கள ஆய்வு செய்யப்பட்ட இடங்கள் :

1. குரிசிலாப்பட்டு
2. மணல்கொள்ளி
3. சல்லியூர்
4. ஆண்டியப்பனூர்
5. கட்டேரி
6. கருப்பனூர்
7. மடவாளம்
8. திரியாளம்
9. சல்லியூர்
10. அச்சமங்களம்

********* ********* ********** ********* ********* ********** ********** **********